# நபி (ஸல்) அவர்கள் கற்றுத் தந்த உளு செய்யும் முறை

இப்னுல் கத்தாப் இஸ்லாமிய அழைப்பு மையம், பஹ்றைன்.

# உளூ

- உளூ என்றால் அரபி மொழியில் வெளிச்சம், பிரகாசம் என்று பொருளாகும்.
- மார்க்கத்தில் உளூ என்றால், அல்லாஹ்வும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்களும் கற்றுத்தந்த முறைப் பிரகாரம் ஒருவர் தனது உடலில் குறிப்பிட்ட உறுப்புக்களைத் தூய்மையான தண்ணீரைக் கொண்டு வணக்க வழிபாட்டுக்காக சுத்தம் செய்வதாகும்.
- இதுவும் அல்லாஹ்விற்காக அடியான் செய்கின்ற ஒரு வணக்கமாகும்.

# உளூவின் சிறப்புக்கள்

அபூஹுரைரா (ரளி) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கின்றார்கள்:

- ஒரு முஸ்லிமான அல்லது முஃமினான அடியார் அங்கத்தூய்மை (உளூ) செய்யும்போது முகத்தைக் கழுவினால், கண்களால் பார்த்துச் செய்த பாவங்கள் அனைத்தும் (முகத்தைக் கழுவிய) நீருடன் அல்லது நீரின் கடைசித் துளியுடன் முகத்திலிருந்து வெளியேறி விடுகின்றன.
- அவர் கைகளைக் கழுவும்போது கைகளால் பற்றிச் செய்திருந்த பாவங்கள் அனைத்தும் (கைகளைக் கழுவிய) நீருடன் அல்லது நீரின் கடைசித் துளியுடன் வெளியேறி விடுகின்றன.
- அவர் கால்களைக் கழுவும்போது, கால்களால் நடந்து செய்த பாவங்கள் அனைத்தும் (கால்களைக் கழுவிய) நீருடன் அல்லது நீரின் கடைசித் துளியுடன் வெளியேறி விடுகின்றன.
- இறுதியில், அவர் பாவங்களிலிருந்து தூய்மை அடைந்தவராக (அந்த இடத்திலிருந்து) செல்கிறார். ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம்: 412.
- உளூவின் மூலம் அதிமாக நாம் பயன்படுத்தும் உறுப்புக்களான கை, முகம், கால் ஆகியவை தூய்மை பெறுவதுடன் அதிலுள்ள பாக்டீரியாக்களும் அகற்றப்படுகிறது.

# உளூவின் முக்கியத்துவம்

ஒவ்வொரு முஸ்லிமும் உளூ செய்யும் முறையை கற்றுக் கொள்வது அவசியமாகும். ஏனெனில், அன்றாடம் நாம் செய்யக்கூடிய சில வணக்கங்கள் உளூவை சார்ந்து உள்ளது.

- தொழுவதற்கு முன்பாக உளூ செய்து கொள்வது கட்டாயமாகும்.
- குர்ஆன் ஓதும் போது உளூவுடன் இருப்பது சிறப்பானதாகும்.
- இரவு தூங்கும் முன் உளூ செய்து கொள்வது ஸுன்னாவாகும்.
- நபி (ஸல்) அவர்கள் கடமையான குளிப்பை நிறைவேற்றுவதற்கு முன்பும் வெள்ளிக் கிழமை குளிக்கும் ஸுன்னாவான குளிப்பிற்கு முன்பும் உளூ செய்துவிட்டுக் குளிப்பதை கற்றுத் தந்துள்ளார்கள்.

## ❶ நிய்யத் செய்தல்

- நிய்யத் என்பது உளூ செய்யப் போகிறேன் என்று உள்ளத்தால் உறுதி கொள்வதாகும்.
- நிய்யத் செய்வதற்குண்டான இடம் உள்ளமாகும்.
- நாவினால் சொல்வது கூடாது.



## ❷ பிஸ்மில்லாஹ் சொல்லுதல்

- பிறகு பிஸ்மில்லாஹ் (அல்லாஹ்வின் பெயரால் உளூ செய்ய ஆரம்பிக்கின்றேன்) என்று சொல்ல வேண்டும்.



# ❸ இரண்டு கைகயையும் மணிக்கட்டு வரை கழுவுதல்



- முதலில் வலது கையையும்
- பிறகு இடது கையையும்
- உள்ளங்கையிலிருந்து மணிக்கட்டு வரை கழுவ வேண்டும்

# ❹ வாய் கொப்பளித்தல், மூக்கிற்கு தண்ணீர் செலுத்தி சுத்தம் செய்தல்





- பிறகு, வலது உள்ளங்கையில் தண்ணீர் எடுத்து,
- அதை வாயிற்கும் மூக்கிற்கும் செலுத்தி வாய் கொப்பளித்தப் பிறகு மூக்கை இடது கையால் சுத்தம் செய்ய வேண்டும்.

# ❺ முகம் கழுவுதல்




- பிறகு, முகத்தை முழுமையாக தண்ணீர் மூலம் கழுவ வேண்டும்.
- முகம் கழுவக்கூடிய அளவு: நீளத்தால் முன்நெற்றி முடியிலிருந்து நாடிக்குழிவரைக்கும், அகலத்தால் ஒரு காதிலிருந்து மறு காதுவரைக்கும்.

# ❻ இரு கைகளையும் முழங்கை உட்பட கழுவுதல்





- முதலில் வலது கையையும் பிறகு இடது கையையும் அதன் விரல்களிலிருந்து ஆரம்பித்து முழங்கை உட்பட கழுவ வேண்டும்.

# ❼ தலையையும், காதையும் மஸ்ஹு செய்தல்

- ஈரமான இரு கைகளால் தலை முன்நெற்றி முடியிலிருந்து ஆரம்பித்து பிடரி வரைக்கும் கொண்டு சென்று மீண்டும் ஆரம்பித்த இடத்துக்கே அவ்விரு கையையும் திரும்ப கொண்டு வர வேண்டும். பிறகு, ஆழ்காட்டி விரலினால் காதின் உள்பகுதியையும், பெருவிரலினால் வெளிப்பகுதியையும் தடவ வேண்டும்.









# ❽ இரண்டு கால்களையும் கரண்டைக்கால் வரை கழுவுதல்




- முதலில் வலது காலையும் பிறகு இடது காலையும் கழுவ வேண்டும்.
- கரண்டைக்கால் என்பது முழங்காலுக்குக் கீழே உள்ள பகுதியை பாதத்துடன் இணைக்கக்கூடிய இடம்.

# ❾ உளூ செய்தப்பின் ஓதவேண்டிய பிரார்த்தனை

உளூ செய்தப்பின் நபி (ஸல்) அவர்கள் ஓதிய பிரார்த்தனையை ஓதுவது சுன்னாவாகும்.

உளூ செய்தப்பின் ஓதவேண்டிய பிரார்த்தனை : உமர் இப்னு அல் கத்தாப் (ரளி) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கின்றார்கள்: உங்களில் ஒருவர் முழுமையான முறையில் உளூ செய்துவிட்டு,

أَشْهَدُ أَنْ لَّا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

*(அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹு வ அன்ன முஹம்மதன் அப்துல்லாஹி வரசூலுஹு)*

பொருள்: நான் சாட்சி கூறுகிறேன், “வணங்குவதற்க தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாறும் இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணைதுணை இல்லை”. நான் சாட்சி கூறுகிறேன், “முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனின் அடியாரும் அவனின் தூதரும் ஆவார்கள்”. என்று கூறினால், சொர்க்கத்தின் எட்டு வாசல்களும் அவருக்காகத் திறக்கப்படுகின்றன. அவற்றில் அவர் நாடிய வாசலில் நுழைந்துகொள்ளலாம்.

ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம்: 397.

# மற்றுமொரு துஆ

அபூ ஸஈத் அல் குத்ரியீ (ரளி) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கின்றார்கள்: யார் உளூ செய்துவிட்டு (பின்வருபவற்றை) கூறுவாரோ,

سُبْحَانَكَ اللَّهُمَّ وَبِحَمْدِكَ، لَا إِلَهَ إِلَّا أَنْتَ، أَسْتَغْفِرُكَ وَأَتُوبُ إِلَيْكَ

*(ஸுப்ஹானகல்லாஹும்ம வபிஹம்திக, லா இலாஹ இல்லா அன்த, அஸ்தக்ஃபிருக வ அதூபு இலைக)*

பொருள்: அல்லாஹ்வே! உன் புகழைக் கொண்டு உன்னை நான் தூய்மைப் படுத்துகின்றேன். வணங்குவதற்கு தகுதியானவன் உன்னைத் தவிர வேறு யாரும் இல்லை. உன்னிடம் பாவ மன்னிப்புத் தேடுகிறேன், உன்பக்கமே நான் மீள்கிறேன்.

இவை ஒரு துண்டில் எழுதப்பட்டு அதில் முத்திரையிடப்படும், மறுமை நாள் வரைக்கும் அது உடைக்கப்படமாட்டாது.


ஆதாரம்: இமாம் தபரானி (ரஹ்) அவர்களின் நூலான முஃஜமுல் அவ்ஸத்: 1455

# உளநவில் பேணவேண்டிய கட்டாயமான, விரும்பத்தக்க காரியங்கள்

# முறைப்படி ஒன்றன் பின் ஒன்றாக செய்தல்

இது உளூவின் (வாஜிப்) கடமைகளில் உள்ளதாகும்.

உளூவின் செயல்களை ஒன்றன் பின் ஒன்றாக வரிசையாக செய்வது அவசியமாகும். வரிசையில்லாமல் உறுப்புக்களை முன் பின்னாக கழுவுவது கூடாது.






# தொடர்ச்சியாக செய்தல்

இது உளூவின் (வாஜிப்) கடமைகளில் உள்ளதாகும்.

நபி (ஸல்) அவர்கள் செய்து காட்டிய முறைப் பிரகாரம் இடைவெயி இல்லாமல் ஒரு செயலை செய்தப் பின் அடுத்த செயலை தொடர்ச்சியகச் செய்தல்.

உளூ செய்யும் போது உறுப்புக்களை ஒரு ஒரு தடவையாக கழுவலாம்

அல்லது

இரண்டு இரண்டு தடவையாக கழுவலாம்

அல்லது

மூன்று மூன்று தடவையாக கழுவலாம்

- நபி (ஸல்) அவர்கள் உளூ செய்யும் போது உறுப்புக்களை ஒரு ஒரு தடவையாகவும் கழுவியுள்ளார்கள். இது வாஜிப் கட்டாயமாகும். இரண்டு இரண்டு தடவையாகவும், மூன்று மூன்று தடவையாகவும் கழுவியுள்ளார்கள்.
- ஆனால் எல்லா நிலையிலும் தலை மற்றும் இரண்டு காதுகாளுக்கு ஒரு தடவைதான் மஸஹ் செய்ய வேண்டும்.

# வலப்புறத்திலிருந்து ஆரம்பித்தல்

- இது உளூவின் ஸுன்னாக்களில் ஒன்றாகும்
- முதலில் வலது புறத்தில் உள்ள உறுப்பையும் பிறகு இடது புறத்தில் உள்ள உறுப்பையும் கழுவ வேண்டும். (குறிப்பாக இரண்டு கைகளையும் கால்களையும் கழுவும் போது இதை கவனிக்க வேண்டும்)
- *அனைத்து செயல்களையும் வலப்புறத்திலிருந்து ஆரம்பிப்பது நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டலில் உள்ளதாகும்.*

# மிஸ்வாக் - பல் துலக்குதல்

- இது உளூவின் ஸுன்னாக்களில் ஒன்றாகும்
- உளூவின் போது நபி (ஸல்) அவர்கள் பல் துலக்குவார்கள். மேலும், அதற்கு ஆர்வமூட்டி இருக்கிறார்கள்.



# தண்ணீரை நடுநிலையாகப் பயன்படுத்துதல்



- தண்ணீரை வீண்விரையம் செய்வது கூடாது.
- தண்ணீர் குழாயை திறந்துவிட்டு கழுவுதல் கூடாது.
- குறைந்த தண்ணீரால் உறுப்புக்களைத் தேய்துக் கழுவ வேண்டும்
- நபி (ஸல்) அவர்கள் அரை லிட்டர் தண்ணீரில் முழுமையான உழூவை செய்துள்ளார்கள். அனஸ் (ரளி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

«كَانَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَتَوَضَّأُ بِالْمُدِّ...»

நபி (ஸல்) அவர்கள் ஒரு முத்துவில் உழூ செய்யக்கூடியவர்களாக இருந்தார்கள்... ஆதாரம்: முஸ்லிம்.



- முத் என்பது அரை லிட்டராகும்.

# கேள்விகள்

1. உளூ என்றால் என்ன?
2. உளூவின் சிறப்புகள் கூறு.
3. உளூ தேவையான இடங்களை கூறு.
4. உளூ செய்யும் முறையைக் கூறு?
5. உளூ செய்தப் பின் ஓதும் ஷஹாதாவை பொருளுடன் கூறு.
6. சொர்க்கத்தின் எட்டு வாசல்களும் யாருக்காகத் திறக்கப்படுகிறது?
7. உளூ செய்தப் பின் நபி (ஸல்) அவர்கள் கற்றுத் தந்த பாவமன்னிப் தேடும் வாசகங்கள் என்ன?
8. உளூவில் கவனிக்க வேண்டிய வாஜிபுகளையும் ஸுன்னாக்களையும் கூறு.
9. நபி (ஸல்) அவர்கள் கற்றுத் தந்த உளூவை செய்வதற்கு தேவையான தண்ணீரின் அளவு என்ன?